**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 134/2022**

**வா.சா.2 – வேலுச்சாமி**

**<u>28-10-2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசு சான்றிதழ் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாச்சிமுத்து கவுண்டரின் இறப்பிற்கு நான் செல்லவில்லை. எனக்கு திருமணம் ஆனதற்கு பின்னிட்டு சுமார் 37 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து நாச்சிமுத்து கவுண்டர் பற்றி தெரியும். எந்த வருடம் என்று சரியாக சொல்ல முடியாது. வாதி எனது மாமனார். எனது மாமனாரின் தாயார் பெயர் வள்ளியம்மாள். வள்ளியம்மாளின் வாரிசு சான்றிதழ் நான் பார்த்ததில்லை. வள்ளியம்மாளின் உடன் பிறந்த சகோதர சகோதரிகளின் பெயர் தெரியாது. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் எனக்கு எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல. நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசுகள் விவரம் பற்றி ஆவணங்கள் மூலம் பார்த்துள்ளேனா என்றால் அவருக்கு 6 ஆண் வாரிசுகள். அவர்கள் 1990 ஆம் ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் தெரியாது. சொத்தில் பாகம் வேண்டி தான் வாரிசு சான்றிதழ் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சொத்துகள் எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும்.

2. வாதி அவருடைய தாயார் மற்றும் சகோதரிகளின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வள்ளியம்மாள் மற்றும் சுப்பாத்தாள் உள்ளதாக நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நாச்சிமுத்து கவுண்டர் உயிருடன் இருந்தபோது அவரைப் பற்றி எனக்கு தெரியாத காரணத்தினால் அவரது வாரிசுகள் பற்றி எனக்கு சாட்சியம் அளிக்க அருகதை இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.